1st September 1970]

Madras Pharmacy Council

*62. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Madras Pharmacy Council has written to the Government on 15-3-1968 to accord sanction for the continuance of the present incumbent, as the Registrar, for a further period of three years ; and

(*b*) if so, the action taken thereon?

சென்னை மருந்தியல் குழு

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தற்போது பதிவாளராக உள்ளவரே மேலும் மூன்று ஆண்டு களுக்கு தொடர்ந்து பதவியில் இருக்க ஒப்பளிப்பு வழங்கும்படி சென்னை மருந்தியல் குழு 15.3.1968 அன்று அரசுக்கு எழுதியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பதிவாளர் பதவியை விளம்பரம் செய்யும்படியும், அவ்விடத் திற்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை தற்போதுள்ளவரையே தொடர்ந்து இருக்க அனுமதிக்கும்படியும், பார்மஸி மன்றத் தலை வருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

*63. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Madras Pharmacy Council has requested the Government on 17-10-1968 to write off the residua instalments of loan payable by it to the Government ; and

(*b*) if so, the action taken thereon ?

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு மருந்தியல் குழு அரசுக்குச் செலுத்தத் தக்க கடனில் எஞ்சிய தவணைத் தொகைகளைத் தள்ளிவிடுமாறு 17.10.1968 அன்று அரசைக் கேட்டுக் கொண்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுத்துக் கொள்ளப்பட்ட நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.